தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர்

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 25-3-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை செய்த கொண்டைக்கடலையை உடனே விற்பனை செய்யவும்

கொண்டைக்கடலையானது பயறு வகைகளில் மிக முக்கியப் பயிராகும். இக்கடலையானது அதிகளவில் புரதச்சத்தினை (25 சதவீதம்) மற்ற பருப்பு வகைளை விட அதிகமாக கொண்டுள்ளது. உலகளவில், 2012-13-ல் சுமார் 12.34 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு, 11.63 மில்லியன் டன்கள் கொண்டைக்கடலை உற்பத்தி செய்யப்பட்டது. கொண்டைக்கடலையில் நாட்டு இரகம் மற்றும் காபூலி இரகம் என இரண்டு இரகங்கள் உள்ளன. இவ்விரண்டு வகை கொண்டைக்கடலைகள் முறையே, உற்பத்தியில் 80 மற்றும் 20 சதவீதப் பங்கீட்டை கொண்டுள்ளன. உலகின் மொத்த கொண்டைக்கடலை உற்பத்தியில், இந்தியாவின் பங்கானது 70 சதவீதமாகும். இந்தியாவின் மொத்த உற்பத்தியான 7.70 மில்லியன் டன்களில், மத்தியப்பிரதேசம் 45 சதவீத கொண்டைக்கடலையை உற்பத்தி செய்து முதலிடத்திலும், இராஜஸ்தான், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களையும் வகிக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள், இலங்கை மற்றும் மலேசியா நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து இக்கடலையானது சிறிய அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் இப்பயிரானது கார்த்திகைப் பட்டத்தில் மட்டும் பயிரிடப்படுகிறது. 2012-13 இல் 9,800 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 5,800 டன்கள் கொண்டைக்கடலை உற்பத்தி செய்யப்பட்டது. திருப்பூர் மாவட்டம் கொண்டைக்கடலை உற்பத்தியில் முதலாவது இடத்தை வகிக்கிறது. 2012-13ல் 3,773 எக்டர் நிலப்பரப்பில் கொண்டைக்கடலை இம்மாவட்டத்தில் பயிரிடப்பட்டது. இதற்கு அடுத்தபடியாக கோயம்புத்தூர் மாவட்டம் உள்ளது. உடுமலைப்பேட்டை சந்தையானது, கொண்டைக்கடலை விற்பனைக்கு மிக முக்கியமான சந்தைகளில் ஒன்றாகும். பொருளாதார ஆய்வில் கொண்டைக்கடலை

விலையானது ரூ. 3700 முதல் ரூ.3800 வரை ஒரு குவிண்டாலுக்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்டுகிறது. கடந்த பத்து வருடங்களில் அங்கு நிலவிய விலை விவரங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்ததில் மார்ச் மாதம் கொண்டைக்கடலை (பெருவெட்டு) விலை குவிண்டாலுக்கு ரூ.4000 விலை இருக்குமென கண்டறியப்பட்டுள்ளது. உடுமலைப்பேட்டை சந்தையில் தற்போதைய விலையானது குவிண்டாலுக்கு ரூ.4000 ஆக உள்ளது. இந்நிலையில், வரும் மாதங்களில் கொண்டைக்கடலை விலை ஏற வாய்ப்புகள் காணப்படவில்லை. ஏனென்றால், கொண்டைக்கடலை அதிகமாக விளையும் மாநிலங்களில் உற்பத்தி அதிகரித்ததே காரணமாகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள, வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் விவசாயிகள் தங்களது கொண்டைக்கடலையை உடனடியாக விற்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:-**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி- 0422-2431405

**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயறுவகைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2450498

மக்கள் தொடர்பு அலுவலர்